சிறப்பு நில அபகரிப்பு வழக்குகள் நீதிமன்றம், சேலம்.

எஸ்.டி.சி. 01/2019

2019 ம் ஆண்டு, நவம்பர் திங்கள், 21 ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின்படி 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.மகேஷ்காந்த், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | :: | சுடலைமணி | வயது | :: | |
| த/பெ | :: | மாரியப்பன் | தொழில் | :: | |
| ஊர் | :: | | சமயம் | :: | |
| வட்டம் | :: | | ஜாதி | :: | |
| மாவட்டம் | :: | | | | |

முதல் விசாரணை

நான் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, சேலம் கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க கிளை மேலாளருக்கு அழைப்பாணை வந்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதிரி நிறுவனத்தின் பெயரில் உள்ள வங்கி கணக்கின் அறிக்கை கொண்டு வந்துள்ளேன். 21.03.2008 முதல் 06.11.2019 வரையிலான காலக்கட்டத்திற்கான கணக்கு பட்டியல் சமர்ப்பிக்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆகும். மேற்கண்ட பாப்பால் எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் உரிமையாளர் தாமு என்பவர் ஆவார். வழக்கு காசோலையான 051913 எங்கள் வங்கி கிளையின் மூலம் பாப்பால் எக்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காசோலை ஆகும். வழக்கு காசோலை எங்கள் வங்கிக்கு 22.08.2016 அன்று கடைசியாக வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்கண்ட காசோலை வங்கி கணக்கில் போதிய தொகை இல்லாததால் 23.08.2016 அன்று திருப்பப்பட்டுள்ளது.

குறுக்குவிசாரணை

வழக்கு காசோலை முதன் முதலாக 02.07.2016 அன்று வசூலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது

என்பதை என்னால் சொல்ல இயலாது.  எங்களுடைய வங்கி கணக்கு விவரங்களின் படி பாப்பால் எக்ஸ்போர்ட் நிறுவனம் பங்குதாரர் நிறுவனம் இல்லை என்றால் சரிதான்.  நீண்ட நாட்களாக மேற்கண்ட வங்கி கணக்கில் வரவு, செலவு ஏதும் இல்லை என்றால் 2015ம் ஆண்டிற்கு பின்னர் வரவு, செலவு ஏதும் இல்லை.

மறுவிசாரணை இல்லை.